செய்தி வெளியீடு எண்:522 நாள்:29.07.2021

# தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் நடைபெற்ற பயிற்சி துணைக் கண்காணிப்பாளர்கள் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
தலைமைச் செயலாளர் அவர்களே!
தமிழ்நாடு காவல்துறையின் தலைமை இயக்குநர் திரு. சைலேந்திர பாபு அவர்களே!
உள்துறைச் செயலாளர் அவர்களே!
தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக இயக்குநர் அவர்களே!
சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே!
காவல்துறையின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கும் அதிகாரிகளே!
காவல்துறையைச் சேர்ந்த வீரர்களே!
உங்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்!

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் சார்பில் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொல்வதை விட உற்சாகம் அடைகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

உங்களது அணிவகுப்பு மரியாதையைக் கண்டபோது எனக்கே ஒரு கம்பீரம் தோன்றுகிறது, உற்சாகம் பிறக்கிறது. இன்னும் சொன்னால் மிடுக்கு ஏற்படுகிறது. அந்தளவுக்கு இந்த அணிவகுப்பானது கம்பீரமாக இருந்தது. உங்களது பயிற்சியையும், உடல் திறத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

‘‘மறமானம் மாண்ட வழிச்செலவும் தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு’’ - என்கிறார் திருவள்ளுவர்.

அதாவது வீரம், மானம், நல்ல வழி நடத்தல், அரசின் நம்பிக்கைக்கு உரியதாக ஆகுதல் ஆகிய நான்கும் தான் படைக்குக் காவல் அரண் ஆகும் என்கிறார் அய்யன் வள்ளுவர்.

அதற்கு இலக்கணமாகத் தமிழ்நாடு காவல்படை உருவாக்கி இருக்கிறது. இந்த நான்கு திறமையையும் மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்ற 86 புதிய துணைக் கண்காணிப்பாளர்கள் பயிற்சி முடித்துள்ளீர்கள். புதிதாக மக்கள்

சேவையாற்றச் செல்லும் இந்தப் புதிய துணைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*துப்பாக்கி சுடுதல்,
*சைபர் குற்றங்கள் தொடர்பான கணினிப் பயிற்சி,
*தடயவியல் பயிற்சி,
*உடற்பயிற்சி உள்ளிட்ட அடிப்படைப் பயிற்சி
*போக்குவரத்தைத் திட்டமிட்டு நிர்வகித்தல், நடைமுறைப்படுத்துதல்,
*போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்,
*பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைக் கையாளுதல்
உள்ளிட்ட பயிற்சிகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திறமைகளைப் பெற்ற நீங்கள், இத்திறமைகளின் மூலமாக மக்களைக் காக்கும் மகத்தான பணிக்கு உங்களை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். புதிதாகக் காவல் களத்தில் இறங்கி உள்ள துணைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாகச் சொல்லத்தக்க மனிதராக உங்கள் காவல்துறைத் தலைமை இயக்குநரே இருக்கிறார். 1987ஆம் ஆண்டு கோபிச்செட்டிபாளையத்தில் உதவிக் கண்காணிப்பாளராகப் பணிக்குச் சேர்ந்த திரு. சைலேந்திர பாபு அவர்கள் இன்று தமிழ்நாட்டின் காவல்துறையின் தலைமைப் பொறுப்புக்கு வளர்ந்துள்ளார் என்றால் அதற்கு அவருடைய உழைப்பும் முயற்சிகளும் மிக மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது. அவரைப் போலவே, பல்வேறு திறமைகளையும் நீங்கள் அனைவரும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தில் இருக்கும் எத்தனையோ துறைகளைப் போல காவல்துறையும் ஒரு துறைதான் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. ஒரு அரசிடம் இருந்து மக்கள் முதலில் எதிர்பார்ப்பது, அமைதியைத்தான். அந்த அமைதியை ஏற்படுத்தித் தர வேண்டிய பெரும் பொறுப்பு காவல்துறைக்குத்தான் உண்டு. எந்த ஒரு நாட்டிலும் சட்டம் ஒழுங்கு சிறப்பாக அமைந்துவிட்டால், பொதுமக்கள் பாதுகாப்பான சூழலை உணர்ந்துவிட்டால் அந்த நாட்டில் மற்ற செயல்களைச் சரியாகச் செய்யலாம்.

சட்டம் ஒழுங்கு சிறப்பாக அமைந்தால்தான் தொழில் சிறக்கும். முதலீடுகள் பெருகும். அச்சமற்று மனிதர்கள் தங்களது உழைப்பைச் செலுத்துவார்கள்.

கல்வி மேன்மை அடையும். வேலைவாய்ப்புகள் பெருகும். அத்தகைய அமைதியை உருவாக்கும் பணியை நீங்கள் செய்கிறீர்கள்.

குற்றங்களுக்குத் தண்டனை வாங்கித் தரும்க் துறையாக இல்லாமல் - குற்றங்கள் நடக்காமல் தடுக்கின்ற துறையாக காவல்துறை மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அந்த ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு அதிகம் இருக்கிறது.

ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகத்துக்கு இன்று நான் அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இன்றைக்கு இது மிக மிக முக்கியமான தேவையாக இருக்கிறது. கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, பாலியல் வன்முறைகள் ஆகியவை தான் மிகப்பெரிய குற்றங்களாக அடையாளம் காட்டப்பட்டன. ஆனால் இவை அனைத்தையும் விஞ்சியதாக சைபர் குற்றங்கள் பெருகிவிட்டன. தொழில்நுட்பம் வளர வளர அதனைக் குற்றம் செய்வோர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

லுங்கி கட்டிக் கொண்டு கழுத்தில் கர்சீப் கட்டி இருந்தால் வழிப்பறி செய்பவர் என்பதைப் போல ஒரு காலத்தில் பத்திரிகைகளில் கார்ட்டூன் போடுவார்கள். ஆனால் இன்று இணைய வசதி வந்ததற்குப் பிறகு அடையாளம் அற்ற, முகம் அற்ற குற்றவாளிகள் பெருகிவிட்டார்கள். தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யும் குற்றங்கள் பெருகிவிட்டன. இணையவழிப் பொருளாதாரக் குற்றங்கள் அதிகமாகிவிட்டன.

தொழில்நுட்பச் சேவைகளைத் திருடுவது - தகவல்களை அழிப்பது - முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது - இணையதளங்கள் மூலமாக மிரட்டுவது - போலிக் கணக்குகள் - போலிப் பெயர்கள் - ஆகியவை பெருகி வருகின்றன. இந்த இணையதளங்கள் மூலமாகப் பாலியல் குற்றங்களும் அதிகமாகி வருகின்றன. நிதிக் குற்றவாளிகளும், பாலியல் குற்றவாளிகளும் நவீனத் தொழில் நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கண்டுபிடித்து தடுப்பதற்கான நவீன வழிமுறைகள் நமக்கும் வந்தாக வேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் சைபர் குற்றங்களைத் தடுப்பதற்கான மிக நவீன வழிமுறைகளைப் பின்பற்றி வருகின்றன. அத்தகைய நவீன வழிமுறைகளை நாம் முழுமையாக அறியவேண்டும்.

2030-க்குள் சைபர் குற்றங்கள் நடக்காத நாடாக மாற்றிக் காட்டப் போகிறோம் என்று ஐக்கிய அரபு நாடுகள் அறிவித்துள்ளது. எத்தகைய தொழில் நுட்பத்தை அவர்கள் உருவாக்கப் போகிறார்கள் என்பதைத் தமிழ்நாடு காவல்துறை தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு நமது காவல்துறை நவீனமயமாக வேண்டும்.

காவல்துறையை நவீனமயமாக்கியதில் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. 1971ஆம் ஆண்டு காவல்துறையில் கம்ப்யூட்டர் பிரிவு தொடங்கப்பட்டது. காவல்துறையில் கம்ப்யூட்டர்மயமாக்கல் தொடங்கிய முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடுதான் பெற்றது. தீவிரவாதிகளை ஒடுக்க சிறப்புப் பிரிவு தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் முதன்முதலாகப் பெண் காவலர்களை நியமித்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பெண் துணை ஆய்வாளர்களையும் நியமித்தார். போலீஸ் பயிற்சிப் பள்ளியைத் திறந்து வைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். விரைவு அதிரடிப்படையை உருவாக்கியதும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக 1969-ஆம் ஆண்டு ஆர்.ஏ. கோபாலசாமி தலைமையில் போலீஸ் கமிஷன் அமைத்ததும் - முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் தலைமையில் 1989-ஆம் ஆண்டு போலீஸ் ஆணையம் அமைத்ததும் கலைஞர் அவர்கள்தான். 2006-ல் பூர்ணலிங்கம் ஐ.ஏ.எஸ் தலைமையில் மூன்றாம் போலீஸ் கமிஷன் அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு வீரதீரச் செயல்கள் புரியும் காவலர்களுக்கு அண்ணா பெயரால் விருது வழங்குவதைத் தொடங்கி வைத்ததும் கலைஞர் அவர்கள்தான்.

ஆட்சியில் இருக்கும்போது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பும் கலைஞர் அவர்கள் 'உதயசூரியன்' என்கிற நாடகத்தை எழுதினார். அது அன்றைய காங்கிரசு அரசால் தடை செய்யப்பட்டது. காவல்துறையைச் சேர்ந்த நண்பர்களின் துயரங்களைத்தான் அந்த நாடகத்தில் எழுதினார். எனவே, அவற்றை நாங்கள் தெளிவாக உணர்ந்துள்ளோம். காவல் துறையைச் சேர்ந்தவர்களது விருப்பங்கள், கோரிக்கைகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றித் தருவோம் என்ற உறுதிமொழியை இந்த விழாவில் அளிக்கிறேன்.

அனைவரையும் தாங்கிப் பிடிக்கும் நிலமாக இருங்கள்.
தாகம் தணிக்கும் நீராக இருங்கள்.
உயிரூட்டும் காற்றாக இருங்கள்.
அனைவருக்கும் பொதுவான வானமாக இருங்கள்.

தீயவை பொசுக்கும் தீயாக இருங்கள்.
எப்போதும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருங்கள்.
மொத்தத்தில் மக்களின் காவல் அரணாக இருங்கள்!

அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள்!
நன்றி வணக்கம்!

இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

முன்னதாக இவ்விழாவில், காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரை ஆற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உள்ளரங்கு, வெளியரங்கு மற்றும் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சிகளில் சிறந்து விளங்கிய பயிற்சி துணைக் கண்காணிப்பாளர்களுக்குப் பதக்கங்களையும், ஒட்டுமொத்த பயிற்சியில் சிறந்து விளங்கிய பயிற்சி துணைக் கண்காணிப்பாளருக்கு டி.ஜி.பி. சிறப்பு வாளையும் வழங்கினார். மேலும், 10.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகக் கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டினார். விழாவின் நிறைவாகத் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் இயக்குநர் முனைவர் பிரதீப் வி. பிலிப், இ.கா.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9